ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் - தொழிற்பாடுகள் பதவி (ஒப்பந்த அடிப்படை)

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம்

சிரேஷ்ட பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளர் (தொழிற்பாடுகள்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்வதற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளுடன் கூடிய முப்படைகளில் அல்லது இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையில் நிரந்தர சேவையில் பணியாற்றியுள்ள தகைமைபெற்ற அத்துடன் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கி விண்ணப்பங்களைக் கோருகின்றது



1.0 பணி / பொறுப்புக்கள் :

- இலங்கை மத்திய வங்கியின் அனைத்து வளாகங்களிலுமுள்ள ஊழியர்களின் வருகைதருபவர்களின் மற்றும் சொத்துக்களுக்கான பாதுகாப்பானதும் பத்திரமானதுமான சூழலை உறுதிசெய்யும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் மூன்றடுக்கு பாதுகாப்பு முறைமையினுள் அனைத்து பாதுகாப்பு தொழிற்பாடுகளையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- இலங்கை மத்திய வங்கியில் நம்பகமான மற்றும் தங்குதடையற்ற பாதுகாப்புத் தொழிற்பாடுகளை உறுதிசெய்வதற்கு பாதுகாப்புடன் தொடர்புடைய உபகரணங்களை பேணுவதையும் நன்நிலைப்படுத்தலையும் மேற்பார்வைசெய்தல்.
- நிறுவனம் சார்ந்த தேவைப்பாடுகள் மற்றும் நியமங்களின் வினைத்திறனையும் இணங்குவித்தலையும் உறுதிசெய்வதற்கு உள்ளக மற்றும் வெளியிலிருந்து சேவை வழங்கும் பாதுகாப்பு ஊழியர்களின் மனித வளங்களையும் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களையும் முகாமைசெய்தல்.
- மனித வளத் திணைக்களத்தின் தேர்ச்சியினை வலுப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தயார்நிலையினையும் ஒட்டுமொத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் செயற்றிறனையும் மேம்படுத்துவதற்கான இயலாற்றல் விருத்தி முன்னெடுப்புக்களுக்கு பங்களிப்புச் செய்தல்.
- இலங்கை மத்திய வங்கியில் ஒத்திசைவானதும் செயற்றிறன்மிக்கதுமான பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு பாதுகாப்பு பணி நியமங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் பேணுதல்.
- பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் செயற்றிறன்மிக்க தன்மையை உயர்த்துவதற்கும் பாதுகாப்பு தொழிற்பாடுகளில் வளர்ச்சியடைந்து வருகின்ற தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- இயலாற்றலை விருத்திசெய்வதற்கான முன்னெடுப்புக்களுக்கு பங்களித்தல் மற்றும் திணைக்களத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிறுவனம் சார்ந்த குறிக்கோள்களை அடைவதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு முகாமைத்துவத்தினால் குறித்தொதுக்கப்படும் வேறு ஏதேனும் பணிகளை நிறைவேற்றுதல் உள்ளடங்கலாக திணைக்களம்சார் கடமைகளை நிறைவேற்றுதல்.

2.0 குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் :

2.1 கல்வித் தகைமைகள் :

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதேனும் துறையில் பெற்றுக்கொண்ட இளமாணி அல்லது முதுமாணி அல்லது உயர்மட்ட பட்டப்பின்படிப்புப் பட்டம்.

2.2 வயது :

- 2026.11.23 அன்று 40 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.

2.3 அனுபவம் :

- முப்படைகளின் அல்லது இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படை நிரந்தர சேவையில் கறைபடியாத மற்றும் தொடர்ச்சியான சேவையுடன் குறைந்தபட்சம் 22 வருடங்களைக் கொண்ட அனுபவம். படைப்பிரிவு, காலாற்படை, வெடிபொருள் ஆயுதங்களை அகற்றுதல், பொறுப்பாளர், அலுவலர் கடமைகள், விசேட படைகள், ஆயுத அல்லது உடற்பயிற்சி போதனாசிரியர், தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் விசேடத்துவம் பெற்றிருத்தல் மேலதிக அனுகூலமாக கருதப்படும்.

2.4 முப்படைகளில் / இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் வகித்த பதவிநிலை :

- இலங்கை தரைப்படையில் லெப்டினன்ட் கேணல், இலங்கை கடற்படையில் கட்டளை தளபதி, இலங்கை வான்படையில் வான் கட்டளைத் தளபதி அல்லது இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையில் பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர் பதவிநிலையில் அல்லது அதற்கு மேல் ஓய்வுபெற்ற அலுவலர்கள்

2.5 ஏனைய தேவைப்பாடுகள் :

- நாட்டின் எப்பாகத்திலும் ஏதேனும் களப் பணிகளைக் கொண்டு நடாத்துவதற்கு மருத்துவ, உடல் மற்றும் உள ரீதியாகப் பொருத்தமானவராக இருத்தல்

3.0 தொழில் :

- மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையிலானது. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் நிரந்தர பதவியணியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

4.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள் :

- கவர்ச்சிகரமான சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் மருத்துவ நலன்கள் என்பவற்றுக்கான பங்களிப்புக்கள்.

தெரிவுசெய்யப்படும் முறை

குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச பிரமாணத்தை பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் மேலதிக மதிப்பீட்டிற்காகத் தெரிவுட்டணைப்படுத்தப்படுவர். எழுத்துமூலப் பரீட்சை/மதிப்பீடு, மருத்துவப் பரிசோதனை மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகப்பரீட்சைகள் போன்றவற்றை இது உள்ளடக்கலாம்.

விண்ணப்பங்கள்

தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள அத்துடன் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்புகின்ற இலங்கை பிரசைகள் தங்கள் விண்ணப்படிவங்களை 2026.11.23 அன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் இணைப்பின் ஊடாக மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

https://www.cbsl.gov.lk/en/careers

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது மேலே உள்ள இணைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

முடிவுத் திகதியிலுள்ளவாறு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைப்பெறமாட்டார்கள். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான தகுதிப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்கின்ற கல்விசார்/தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் என்பவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை பதிவேற்றம் செய்யுமாறு விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
(அதாவது, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டச் சான்றிதழ்கள் / விரிவான பெறுபேற்று பத்திரங்கள், முப்படைகளின் சேவைப் புத்தகம் / இலங்கை பொலிஸிடமிருந்து சேவைக் கடிதங்கள், ஏனைய தகைமைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள்.)

நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் நடாத்தப்படும் சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருத்திற்கொள்ளப்படமாட்டர்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழப்பொன்றாக அமையும். பதவிகளை நிரப்புவதற்கான எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான அல்லது ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவட்டவணைப்படுத்தப்படும் அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகள் தெரிவுசெய்யப்படும் அனைத்து அபேட்சர்களுக்கும் ஏற்புடையதாகவிருக்கும்.

பணிப்பாளர் – மனித வளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715

Gazette.lk SINCE 2016 AMBITIONS REALIZED